




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி பரவையில் நடைபெற்ற மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தனச்செல்வம், வழக்கறிஞர் ரகு பாலாஜி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கணேசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மதுரை பாலா, மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் ஜெயக்குமார், பரவை பேரூர் செயலாளர் ராசாமணி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.கே. ஜெயராமன், வி.பி.திருக்குமரன், சிறைச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் பரவை மனோகரன், முருகானந்தம், பகுதி செயலாளர்கள் காவேரி, சுதன், அன்பழகன், பழனிச்சாமி, மதன், மதி வெங்கடேஷ், நாகஜோதி சிவா, சசிதேவா, ராஜகோடி, ரமேஷ் வைரமணி, மாவட்ட பிரதிநிதி என்.எஸ்.மணி, மாமன்ற உறுப்பினர்கள் அமுதா முத்துப்பேர்க்கிணியன், அமுதா தவமணி, பரவை பேரூராட்சி கவுன்சிலர்கள் பாலசுப்பிரமணி, துரை சரவணன், திருப்பதி, பகவதி ஆறுமுகம், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், பரவை அன்புச்செல்வன், நிர்வாகிகள் ஜே.கருப்பு, ஜே.மரியா, தங்கராஜ், கருணாநிதி, குமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்

### அயல்துறைக் கொள்கை, உள்துறைக் கொள்கை என அனைத்திலும்

# இந்தியாவை பின்னுக்குத் தள்ளியதுதான் மோடி ஆட்சியின் சாதனை!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, மார்ச் 25-

அயல்துறைக் கொள்கை, உள்துறைக் கொள்கை என அனைத்திலும் இந்தியாவை பின்னுக்குத் தள்ளியது தான் மோடி ஆட்சியின் சாதனை என “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

பிரதமர் நரேந்திர மோடியை பாராட்டி நாமாவளி பாட ஏதாவது ஒரு நாட்கணக்கை கண்டு பிடித்துக் கொண்டேயிருக்கிறார்கள் அவரது அடிப்பொடிகள். இப்போது புதிதாக ஒன்றை கண்டுபிடித்து புல்லரிக்கிறார்கள்.

பிரதமராக உள்ள நரேந்திர மோடி குஜராத் முதல்வராகவும், பின் பிரதமராகவும் பொறுப்பு வகித்து 8,931 நாட்கள் ஆகிறதாம். அதற்காக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா துவங்கி, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபின் உட்பட பா.ஜ.க.வினர் பலரும் பாராட்டு மழை பொழிந்து வருகின்றனர்.

அரசின் தலைவராக அவர் 8,931 நாட்கள் ஒரு முறை கூட விடுமுறை எடுக்காமல் உழைத்திருக்கிறார் என்று அமித் ஷா கூறியுள்ளார். அவர் பிரதமரான பிறகு உள்நாட்டில் இருந்ததை விட தன்னுடைய கார்ப்பரேட் கூட்டாளிகளின் மூலதன மூதலீட்டிற்காக வெளிநாடுகளுக்கு பயணம் செய்த நாட்கள் அதிகம். இவை விடு முறை கணக்கில் வருமா என்று தெரியவில்லை.

இவர் குஜராத் மாநில முதல்வராக இருந்த போதுதான் சிறுபான்மை இஸ்லாமிய மக்கள் நர வேட்டையாடப்பட்டார்கள். அப்போதைய பிரதமர் வாஜ்பாய் நான் எந்த முகத்தை வைத்துக் கொண்டு வெளிநாட்டிற்கு செல்வேன் என்று சொல்லும் அளவுக்கு நிலைமை இருந்தது. இன்றைக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப்பும், பிரதமர் மோடியும் நெருங்கிய நண்பர் கள் என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் குஜராத் வன்முறையைத் தொடர்ந்து அப்போது மோடி அமெரிக்கா வர விசா வழங்க மறுத்தது.

குஜராத் மாடல் என்று கட்டமைக்கப்பட்ட போலியான பிம்பத்தையே மக்களவை தேர்தலுக்கான முதலீடு ஆக்கினார்கள். ஆனால் அந்த குஜராத் மாடல் என்பது போலியானது; புனைந்துரைக்கப்பட்டது என்பது அன்றைக்கே அம்பலமாகிவிட்டது. குஜராத்தை விட பல்வேறு துறைகளில் கேரளம், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பல படிகள் முன்னேறியுள்ளன.


பிரதமராக வந்தபிறகு நரேந்திர மோடி மக்களுக்கு அளித்த எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. வேளாண் விளை பொருட்களுக்கு உற்பத்திச் செலவைவிட இரு மடங்கு விலை, ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளாகவே தேங்கி நிற்கிறது. இவரால் கொண்டு வரப்பட்ட பண மதிப்பிழப்பு, கருப்புப் பண ஒழிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் படு தோல்வி அடைந்துவிட்டன.

மறுபுறத்தில் இந்தியாவின் மதச்சார்பின்மை, ஜனநாயகம் கூட்டாட்சி போன்ற அரசியல் சட்ட விழுமியங்களின் மீது தாக்குதல் தொடுத்து வருவது தான் அரசுத் தலைவர் என்கிற முறையில் இவரது சாதனை. அயல்துறைக் கொள்கை, உள்துறைக் கொள்கை என அனைத்திலும் இந்தியாவை பின்னுக்குத் தள்ளியதுதான் மோடி ஆட்சியின் சாதனை. அரசுத் தலைவர் என்கிற முறையில் இவரது ஆட்சிக்காலத்தை இருண்ட காலம் என்றே வரலாறு பதிவு செய்யும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேச கலாச்சார பரிமாற்ற திட்டங்கள்: நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 25 -

இந்தியப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பரப்பவும் மேம்படுத்துவதற்கும் பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சர்வ தேச கலாச்சார பரிமாற்ற திட்டங்களை செயலாக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியாவின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக கலாச்சார பரிமாற்ற திட்டங்களை செயலாக்க ஒன்றிய அரசு ஏதேனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

கடந்த பத்து ஆண்டுகளில் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலை பண்பாடு வரலாற்றாசிரியர்கள் பல்வேறு நாடுகளுக்கு மேற்கொண்ட ஆய்வுகளின் விவரங்கள்

மற்றும் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலை வரலாற்றாசிரியர்களை பல்வேறு நாடுகளுக்கு அனுப்புவதற்கு ஒன்றிய அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா? அதன் விவரம் தருக?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்ததால்.

அதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத் எழுத்துபூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் உட்பட 115 நாடுகள் தங்களது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பரஸ்பரம் மேம்படுத்தும் கலாச்சார பரிமாற்ற திட்டங்களை (CEPs) செயல்படுத்தும் நோக்கில்

இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம் உடன் கலாச்சார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்திய அரசு கலாச்சார அமைச்சகம், இந்த சர்வதேச கலாச்சார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பட்டியல் இணைப்புI கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் சர்வதேச கலாச்சார பரிமாற்ற திட்டத்தில் கலாச்சார பரிமாற்ற திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பட்டியல் இணைப்புII இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தொல்லியல் மற்றும் பண்டைய வரலாற்று நினைவுச் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக, இந்திய தொல்லியல் துறையில் ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டில் தொல்லியல் ஆய்வாளர் அடங்கிய குழுக்கள் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இருப்பினும், இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலை பண்பாடு வரலாற்றாசிரியர்களுக்கான அயல்நாட்டு பயணங்களுக்கென்று தனியாக பட்ஜெட் நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

# பகைப்புலம் புகுந்து பந்தாடிக் காட்டுவோம்!
# பகலவன் தலைமகனை முதல்வராக அமர்த்துவோம்!

இப்போதெல்லாம் திராவிடக் கட்சி என்று கூறிக் கொள்ளுகின்ற அ.தி.மு.கவின் எடப்பாடி பழனிச்சாமி அடிக்கடி கூட்டணிப் பேச டெல்லிக்குச் செல்கிறார். அ.தி.மு.க தலைமை அலுவலகம் டெல்லியிலா இருக்கிறது? கூட்டணியைப் பேசி யாருக்கு எவ்வளவு என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்வாராம்; அதை எடப்பாடி கேட்டுக் கொண்டு வருவாராம். அத்வானி, ஜஸ்வந்சிங் போன்ற பா.ஜ.க தலைவர்களெல்லாம் அம்மையாரின் போயஸ் கார்டன் வீட்டின் வாசலில் நின்றது ஒருகாலம். இன்றோ நிலைமை மாறி விட்டது. எங்கள் தலைவர் போட்டி தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் தான் என்று சரியாகத் தானே கூறியுள்ளார்.

அ.தி.மு.க. எத்தனையோ தேர்தல்களைச் சந்தித்து வென்றுள்ளதாக எடப்பாடி பழனிச்சாமி கூறியுள்ளார். ஆனால் எடப்பாடி தலைமையேற்றப் பின் எத்தனை தேர்தல்களில் அ.தி.மு.க வெற்றி பெற்றது என்பதனைக் கூறுவாரா? எம்.ஜி.ஆரும், அம்மையாரும், எடப்பாடி யாரும் ஒன்றா? இதுவே அ.தி.மு.க தொண்டர்கள் எழுப்பும் கேள்வி.

போர் நடக்கிறது எரிவாயு (கேஸ்) கிடைக்கவில்லை மக்களைப் பற்றிச் சிந்தித்தார் எங்கள் தலைவர். வீட்டில் அடுப்பு எரிந்தால்தான் நாட்டு மக்கள் வயிறு நிரம்பும் என்று பசியின் நிலை அறிந்ததால் காலை உணவு தந்தவர் ஆயிற்றே! அதனால் மின்சார அடுப்பு பயன்படுத்துங்கள் எல்.பி.ஜி. கேஸ் கிடைக்கும் வரை மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு 2 ரூபாய் மானியம் என்று அறிவித்தார். அப்படி இந்தியாவில் எந்த மாநில முதல்வராவது அறிவித்தாரா? ஏன் பா.ஜ.க ஆளும் 22 மாநில முதல்வர்களில் ஒருவராவது அறிவித்தாரா இல்லையே! அவர்களுக்கு மக்களைப் பற்றி சிந்தனையில்லை. மக்களைப் பற்றி சிந்திப்பவரே நல்ல தலைவராக இருக்க முடியும். இதுதான் நல்ல ஆளுமைக்கு அழகு. அவரே நம்தலைவர்.

காவல்துறையில் கர்நாடகாவில் பணியாற்றிவிட்டு தமிழ்நாட்டு அரசியலை அறவே அறியாது அரிச்சுவடியை மட்டும் அறிந்துகொண்டு அனைத்தும் அறிந்த மேதாவி போல் தற்போது பா.ஜ.கவால் ஓரங்கட்டப்பட்டு உட்கார்ந்து இருக்கும் நிலையிலும் அண்ணாமலை வரஇருக்கிற 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. படு தோல்வி அடையப் போவதாகவும் அதனை அறிந்து தலைவர் முதல் தொண்டர் வரை கதறுகிறார்கள், பதறுகிறார்கள் என உள்ளம் மகிழ உளறிக்கொட்டியுள்ளார். என்னே ஆசை பார்த்தீரா? அரவக்குறிச்சிக்காரருக்கு!

**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



இவர் ஏதோ மாவீரன் அலெக்சாண்டரின் குரு அரிஸ்டாட்டில் பாருங்கள். நற்கருத்துக்களை நல்கிடும் நவீனச் சிந்தனையாளரைப் போல் சொதப்பல் கருத்துக்களை தொலைநோக்கு சிந்தனைப் போல் கக்கியுள்ளார்.

மதுபானத்தில் முதலில் ரூ. 34,000 கோடி ஊழல் என்றார் பின்பு ரூ. 1000 கோடி ஊழல் என்றார். சொன்னால் எதிலும் உறுதியாக இருக்க வேண்டும். மறுகணமே மாற்றிப் பேசுவது பித்த நிலை இல்லாத நல்ல மனிதனுக்கு அழகல்ல, விளைவு என்ன ஆனது?

பா.ஜ.க. தமிழ்நாடு தலைவர் பதவியில் இருந்து தூக்கி எறிந்தார்கள். பிறகு நயினார் நாகேந்திரனை தலைவராக ஆக்கினார்கள். அவரும் பதவி ஏற்ற சில நாட்கள் நாகரிகமாக பேசியவர் யார் சொன்னாரோ தெரியவில்லை அண்ணா மலைக்கு அண்ணனாக மாறி அவரும் அவதூறுகளை அள்ளி விடத் தொடங்கியுள்ளார்.

தி.மு.கவின் சோலி முடிந்து விட்டதாம். தேசிய ஜனநாயக கூட்டணிதான் ஆட்சி அமைக்க போகிறதாம். அப்பப்பா என்னே ஆருடம்! எப்படிப்பட்ட அரசியல் ஞானம்! சோலி முடிந்தது என்ற நயினாரைப் பார்த்து கேலி பேசி மக்கள் சிரிப்பது அவர் காதில் இன்னும் விழவில்லை போலும்.

அண்ணாமலை அடிக்கடி பேட்டி தருவதைப் பார்த்தால் பா.ஜ.கவுக்கு தலைவர் நயினாரா! அல்லது அண்ணாமலையா! என்கிற கேள்வியை மக்கள் கேட்கிறார்கள் என்பதை நயினார் அறிவாரா? அல்லது பத்திரிகையாளர்களை நான் சந்திப்பதை விட நீங்களே சந்தியுங்கள் என்று அண்ணாமலையிடம் நயினாரே கூறிவிட்டாரா?

ஒன்று மட்டும் கற்றுக் கொண்டார் அண்ணன் நயினார் ஏதாவது கேள்வி கேட்டால் “எனக்கு எதுவும் தெரியாது” என்று பதில் சொல்கிறார். இதற்கு ஒரு தலைவர் தேவையா? எங்கே போனது உங்கள் துணிச்சல்? வள்ளியூரை விட்டு வர மறுக்கிறதா?

சி.பி.ஐ. வழக்கு என்றவுடன் தம்பி செந்தில் பாலாஜியின் மனம் சிதைந்து போய் விட்டதாம். பயப்படாமல் போங்கள் என்று பரிகாசச் சொல்லை அண்ணாமலை பேசியுள்ளார். செந்தில் பாலாஜி பயமாக இருக்கிறது என்று இவரிடம் கூறினாரா? அவர் எப்படிப்பட்டவர் என்பது எனக்கு 30 ஆண்டுகளாகத் தெரியும். கரூர் தொகுதியில் என் பாதம் படாத இடமே இல்லை. அந்த அளவிற்கு மாணவர் அணியில் இருந்த போது என்னையும் வேலை வாங்கினார், அவரும் வேலை செய்தார். அதனால் தான் இந்த உச்சத்தை அவர் தொட்டுள்ளார்.

கரூர் சம்பவம் நடந்தவுடன் முதலில் வந்தவர் எம்.ஆர்.விஜயபாஸ்கராம், இரண்டாவதாக வந்தவர் பா.ஜ.கவினராம், மூன்றாவதாக வந்தவர் செந்தில் பாலாஜியாம்! இதில் முன்வந்த மற்றவர்களைப் பற்றிப் பேசாத அண்ணாமலை செந்தில் பாலாஜி ஏன் வந்தார்? என்கிறார். சி.பி.ஐ விசாரணைக்கு முன்வந்த இருவரையும் ஏன் அழைக்கவில்லை என்று கேட்கவில்லையே ஐ.பி.எஸ். அண்ணாமலையே!

ஒரு முன்னாள் அமைச்சர், கரூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் முதல்வருக்கு தகவல் கூறி வரவழைத்து விட்டார். துணை முதல்வரை துபாயிலிருந்து வரவழைத்து விட்டார். அப்படி அவர்களெல்லாம் வரும் போது ஆம்புலன்ஸ்களை வர வழைக்க மாட்டாரா? தி.மு.க மாவட்டச் செயலாளர் ஏற்பாடு செய்த ஆம்புலன்ஸில் தி.மு.க கொடியும் மருத்துவஅணி பெயரும் ஒட்டப்பட்டதில் என்ன தவறு கண்டார்? ஆக சரியாக மாட்டிக் கொண்டார் என்று மகிழ்ச்சியில் அண்ணாமலை திளைத்துள்ளார்.

அண்ணாமலை சொல்கிற எம்.ஆர்.விஜயபாஸ்கர் முன்னாள் அமைச்சர்தான். அவரால் மருத்துவமனைக்கு உடனே வர முடியுமென்றால் செந்தில் பாலாஜியால் ஏன் வர முடியாது? எம்.ஆர்.விஜயபாஸ்கர் பதவி பெற்றது எப்படி என்பதும் அவருக்கு அப்பதவி எங்கு வைத்து எழுதப்பட்டது என்பதும் அதற்குக் காரணமாக இருந்தவர் செந்தில் பாலாஜி என்பதும் அண்ணாமலைக்குத் தெரியுமா?

செந்தில் பாலாஜி டெல்லிக்குச் சென்றார். சி.பி.ஐ விசாரணையை சந்தித்தார் சிரித்த முகத்துடன் வெளியே வந்தார். என்ன ஆனது? அண்ணாமலை நினைத்தது எதுவுமே நடக்கவில்லை. இங்கு ஏமாற்றம் அண்ணாமலைக்குத்தான்.

இந்த அண்ணாமலை ஓட்டுக்குப் பணம் கொடுக்கலாமா என்று கேட்கிறாரே! அரவக்குறிச்சி தேர்தலில் இவர் போட்டியிட்ட போது ஓட்டுக்கு ரூ.1000 கொடுத்தாரா இல்லையா? மறுக்க முடியுமா? அப்படியிருந்தும் தோற்றார். கழகம் தான் வென்றது.

அடுத்து உள்ளாட்சித்துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டு ரூ. 888 கோடி ஊழல். ஆத்திகவாதிகள் ஒரு எட்டு இருந்தாலே உருப்படாது என்பார்கள். இதில் 3 எட்டு இந்த குற்றச்சாட்டு தேறவே தேறாது. ஒரு பைசா கூட ஊழல் இல்லை என்றும் முடிந்தால் வழக்கு போடுங்கள் சந்திக்கிறேன் என்றும் அமைச்சர் நேரு பகிரங்கமாக சவால் விட்டார். எதிர் திசையிலிருந்தும் எந்த பதிலும் இல்லை. உண்மை இருந்தால் தானே பழி போடத் துணிவார்கள்.

இந்த லட்சணத்தில் பிரதமர் மோடி திருச்சி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசும்போது அமைச்சர் நேரு மீது ஊழல் வழக்கு உள்ளதென்று பேசி நடவடிக்கை எடுப்போம் என்கிறார். பிரதமர் பேசும்போது உண்மையைக் கேட்டுத் தெரிந்து தானே பேச வேண்டும். இப்படி யார் எழுதிக் கொடுத்தாலும் பேசிவிடலாமா? அதற்காக பின்னர் மோடி வருத்தப்பட்டதாகவும் பா.ஜ.கவினர் சிலர் கூறினார்கள்.

பலர் இரத்தம் சிந்தி உயிரை ஈந்திப் பெற்ற சுதந்திர இந்தியாவை எளிதாக ஒரே நாளில் என்பதை விட சில மணி நேரங்களில் அடிமை இந்தியா ஆக்கியப் பெருமை பிரதமர் மோடியைச் சேரும். பலமுறை இந்தியா - பாகிஸ்தான் போரை நான்தான் நிறுத்தினேன் என்ற டிரம்பின் சொல்லை நாடாளுமன்றத்தில் இதுவரை பிரதமர் மோடி மறுத்துப் பேசினாரா? கேள்வி கேட்டவர்களையும் சஸ்பெண்ட் செய்தார்கள்.

இந்திய தலைமை தேர்தல் அதிகாரி மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் (இதுவரை இப்படி நடந்ததில்லை) 190 எம்.பி.க்கள் கையெழுத்திட்டுக் கொண்டு வந்துள்ளனர். இது தேர்தல் ஆணையத்தில் பிரதமர் மோடி மூக்கை நுழைத்து அழுத்தம் கொடுக்கிறார் என்பது தான் இதற்கு காரணம். இதற்கு உடனடியாக தேர்தல் அதிகாரி ஞானேஷ்குமார் ராஜினாமா செய்திருக்க வேண்டும். செய்தாரா? இல்லையே!

இதற்குத்தான் எங்கள் முதல்வர் அண்ணன் தளபதி பிரதமர் மோடியிடம் இருக்கும் துணை நிறுவனங்கள் இ.டி, ஐ.டி, சி.பி.ஐக்கெல்லாம் நாங்கள் அஞ்ச மாட்டோம்; துணிந்து எதிர்கொள்வோம் என்று கூறினார். இது ஒரு கட்சித் தலைவரின் கடமை உணர்வு. அதனால் ஏற்பட்ட விளைவு நம்மை காக்க நம்தலைவர் இருக்கிறார் என்ற துணிச்சலுடன் கழகத்தினர் களப் பணி ஆற்றத் துவங்கிவிட்டனர்.

இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் முன்பே இளைஞர் அணி மண்டல மாநாடுகளை நடத்தி இளைஞர்களுக்கு எழுச்சியுரை தந்ததோடு தேர்தல் பணியை சென்ற மாதமே தொடங்கி விட்டார். அவர் காலத்தில் தமிழ்நாடு விளையாட்டில் முதல் மாநிலமாக திகழ்வது முதல்வருக்கும் பெருமை தமிழ்நாட்டுக்கும் பெருமை.

இளைஞர்களே! ஜார் மன்னர் ஆட்சியை வீழ்த்த கார்ல் மார்க்ஸ் தத்துவத்தை கரம் எடுத்து லெனின் ரஷ்யப் புரட்சியை நடத்தி சோவியத் யூனியனை மலரச் செய்தார்.

வால்டேர் ரூசோவின் எழுத்துக்கள் புரட்சி செய்து மக்களை சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக திரளச்செய்து பிரெஞ்ச் புரட்சி நடத்தி மக்களாட்சி கொண்டு வந்தனர்.

இன்று ஈரானில் நாசம் செய்யும் அமெரிக்காவை வியட்நாம் புரட்சியாளர் ஹோசிமின் மக்களை ஒன்று திரட்டி எதிர்த்துப் போராடி பல லட்சம் உயிர்களை பறிகொடுத்து அமெரிக்காவை விரட்டி வியட்நாமை மீட்டெடுத்தார்.

அமெரிக்காவின் அடிமை பாடிஸ்டாவின் சர்வாதிகார ஆட்சியை கரும்புக் கட்டுக்குள்ளும், மலைகளுக்குள்ளும் தங்கி இருந்து மக்கள் ஆதரவுடன் பிடல் காஸ்ட்ரோவும் சேகுவேராவும் தூக்கி எரிந்து ஆட்சி அமைத்தனர். இப்படி எத்தனையோ உதாரணங்களை கூற முடியும்.

அதைப் போல் தமிழகத்தில் குடிக்கும் தண்ணீருக்கும் கல்விக்கும் நிதி தராமல் வஞ்சிக்கும் பிரதமர் மோடி அரசை எதிர்க்க வேண்டிய சூழல் வந்துள்ளது. ஒன்றிய அரசோ என்னவெல்லாமோ சித்து வேலைகளைச் செய்து திராவிட மாடல் அரசையும் நம் அன்பிற்கினிய தலைவரையும் வீழ்த்த திட்டம் வகுத்து வருகிறார்கள்.

எடப்பாடி அதற்குத் துணை போகிறார். நம்மை பொறுத்த வரை எடப்பாடி பா.ஜ.கவின் பொம்மைதான். சூழ்ச்சியாளர்கள் பா.ஜ.கவினர்தான். திராவிட மண்ணில்தான் அவர்கள் சூழ்ச்சி வெல்லவில்லை. அதனை உண்மையாக்கிக் காட்ட நம்முதல்வர் அண்ணன் தளபதி தம் அசைக்க முடியாத முதல்வர் என்று காட்ட பா.ஜ.க. சூழ்ச்சி எதையும் சந்திக்க நாம் தயாரென்று காண்பிக்கும் காலம் வந்துவிட்டது. இரத்தம் சிந்த தயாராவோம். இமாலய வெற்றி பெற்றுக் காட்டுவோம். இதுவே நமது சபதம்.